தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 85 /பேரூ/2021

நாள்22.11.2021

திருமதி. ரா. ரத்னா தேவி,
பழனிசெட்டிபட்டி,
தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பழனிசெட்டிபட்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி, கதவு எண்.9–1–10/1 வடக்கு ஜெகநாதபுரம், கக்கன்ஜி தெரு, பழனிசெட்டிபட்டி என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. ரத்னாதேவி (க/பெ பா. ராஜா (லேட்)) என்பவரது 19.05.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.5.2021ல் பெறப்பட்டு 85/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி, கதவு எண்.9–1–10/1 வடக்கு ஜெகநாதபுரம், கக்கன்ஜி தெரு, பழனிசெட்டிபட்டி என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. ரத்னாதேவி தமது 19.5.2021 நாளிட்ட புகார் மனுவில் தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் 2.9.2010ஆம் ஆண்டில் காலமுறை ஊதியத்தில் நிரந்தர துப்புரவுப் பணியாளர் பணிநியமனம் பெற்று பணிபுரிந்துவந்த தனது கணவர் திரு. பா. ராஜா பணியிடையே 1.9.2019 அன்று இயற்கை எய்திவிட்டார் என்றும், அவரது மனைவியும் வாரிசுதாரருமான தான் அரசாணைப்படியும், பணியமைப்பு விதிகளின்படியும் தமது கல்வித் தகுதிக்கேற்ப கருணையடிப்படையில் வாரிசு வேலைவேண்டி பழனிசெட்டிபட்டி செயல் அலுவலருக்கு 22.10.2019ல் விண்ணப்பம் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார். அதற்கு பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் பணியிடையே மரணமடைந்த அவரதுகணவர் பா. ராஜா வகித்த துப்புரவுப் பணியாளர் பணியிடத்தைத் தவிர்த்து வேறு காலிப்பணியிடங்கள் ஏதும் பேரூராட்சியில் இல்லை என்றும், தேனி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் அந்த காலிப்பணியிடத்தை ஒதுக்கீடு செய்து வழங்க தேனி மண்டல

பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு 12.8.2020ல் பரிந்துரை செய்து அனுப்பி வைத்தார் என்றும், அதற்கு தேனி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் தமது தகுதிக்கேற்ப தேனி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் உரிய காலிப்பணியிடங்கள் இருந்தும், அரசாணை பணியமைப்பு விதிகளுக்கு மாறாக, உண்மைக்கு புறம்பாகவும் பொய்யாக காலிப்பணியிடங்கள் ஏதும் இல்லை என்று தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார். காரணம் தான் தாழ்த்தப்பட்ட குறவன் சாதியைச் சார்ந்தவள் என்பதற்காகவும், தனது கணவர் துப்புரவு பணியாளர் என்ற காரணத்திற்காகவும் தனது கல்வித் தகுதிக்கேற்ப உரிய காலிப்பணியிடங்கள் இருந்தும் இல்லை என்று சாதீய வன்மத்துடன் தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார். அரசாணைகள்படியும், பேரூராட்சி இயக்குநர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடிதத்தின்படியும் கருணை அடிப்படையிலின்றி துப்புரவுப் பணியாளர் பணியிலிருந்து நேரடியாக பதிவறை எழுத்தர் பணிக்கு பணிமாறுதல் பதவி உயர்வு வழங்கக் கூடாது என்ற உத்தரவுக்கு மாறாக லஞ்சம் கொடுத்து முறைகேடு செய்து இன்றுவரை தற்காலிகமாக பதிவறை எழுத்தர் பணிக்கு பணிமாறுதல் பதவி உயர்வு பெற்று பணிபுரிந்துவரும் வடுகப்பட்டி பேரூராட்சி பதிவறை எழுத்தர் திரு. காளியப்பன், ஓடைப்பட்டி பேரூராட்சி பதிவறை எழுத்தர் திரு. மாரிச்சாமி, ஹைறவேவிஸ் பேரூராட்சி பதிவறை எழுத்தர் கணேசன் ஆகியோருடைய தற்காலிக பணிமாறுதல் பதவி உயர்வை அரசாணைபடியும், பேரூராட்சி இயக்குநர், உதவி இயக்குநர் உத்தரவின்படியும் உரிய நடவடிக்கை எடுத்து அந்த உத்தரவை ரத்து செய்து, மேற்படி அரசாணை பணியமைப்பு விதிகளுக்குட்பட்டு கருணை அடிப்படையில் தனது கல்வித் தகுதிக்கேற்ப ஏதேனும் ஒரு பேரூராட்சியில் பதிவறை எழுத்தர் பணிநியமனம் வழங்க தான் விண்ணப்பம் செய்ததாகவும், அதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் காலம் தாழ்த்தி வருகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நீதிமன்ற உத்தரவின்படி புதிய வழிகாட்டுதலோடு தற்போது தமிழக அரசு அரசாணை எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.1.2020ல் ஆணை பிறப்பித்துள்ளதாகவும், அந்த அரசாணைப்படி தனது கல்வித் தகுதிகேற்ப இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், பதிவறை எழுத்தர் போன்ற பணியிடங்கள் கருணை அடிப்படையில் வாரிசு வேலை வழங்கலாம் என்று ஆணை பிறப்பித்துள்ளதால், தேனி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் இளநிலை உதவியாளர் காலிப்பணியிடம் 7, வரித்தண்டலர் காலிப்பணியிடம் 6, உதவியாளர் காலிப்பணியிடம் 1 உள்ளதென்று தேனி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் அலுவலக பொதுத்தகவல் அலுவலரால் 29.3.2021 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஏதேனும் ஒரு காலிப்பணியிடத்தை தனக்கு ஒதுக்கி தமது கல்வித் தகுதிக்கேற்ப கருணையடிப்படையில் பணிநியமனம் செய்ய கேட்டதற்கு, பழைய அரசாணை 206ஐ காரணம் காட்டி இளநிலை உதவியாளர், வரித்தண்டலர் பணி வழங்க முடியாது என்றும், தனது கணவர் செய்த துப்புரவு பணியையே தமக்கு ஒதுக்கீடு செய்து வழங்குவதாகவும் தேனி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் திரு. காளியப்பன் தனது 18.9.2020 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்து தன்னை துப்புரவு பணிக்கு விண்ணப்பம் செய்யும்படி சாதீய வன்மத்துடன் வற்புறுத்தினார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, அரசாணைகளின்படியும், பணியமைப்பு விதிகளின்படியும் தனது கல்வித் தகுதிக்கேற்ப ஏதேனும் ஒரு காலிப்பணியிடத்தை ஒதுக்கி தனக்கு பணிநியமனம் வழங்காமல் தொடர்ந்து மறுத்துவரும் தேனி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் மீது வன்கொடுமை தடுப்பு திருத்தச் சட்டம் 2018–ன்படி உரிய நடவடிக்கை எடுத்து, கணவரை இழந்து எந்தவொரு வருவாயும் இல்லாமல் இரண்டு பெண் குழந்தைகளை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டுகொண்டுவரும் தன் மீது இரக்கம்கொண்டு விரைவில் தமக்கு தேனி மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் காலியாக இருக்கும் உதவியாளர், பதிவறை எழுத்தர், இளநிலை உதவியாளர், வரித்தண்டலர் போன்ற ஏதேனும் ஒரு காலிப்பணியிடத்தை ஒதுக்கி தம்மை கருணையின் அடிப்படையில் பணி நியமனம் செய்ய உரிய விசாரணை மேற்கொண்டு ஆணை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ளார்.

2. பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 6.10.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 27.9.2021 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேற்கண்ட இருவரும் 06.10.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

முறையீட்டு மனுதாரர் திருமதி. ரா. ரத்னாதேவி 6.10.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் “எனது கணவர் திரு. ராஜா தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணியாற்றியபோது 1.9.2019ல் பணியிடையே காலமானார். அவரது மறைவையொட்டி அவரது மனைவியான நான் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பித்துள்ள எனக்கு, எனது கல்வித் தகுதியின் அடிப்படையில் கருணை அடிப்படையில் பதிவறை எழுத்தர் பணியிடம் வேண்டி பழனிசெட்டிபட்டி பேரூராட்சியை வேண்டியிருந்தேன். ஆனால், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் பதிவறை எழுத்தர் பணியிடம் காலியாக இல்லை என்றும், துப்புரவு பணியாளர் பணியிடம்தான் காலியாக உள்ளது என்றும், எனவே துப்புரவு பணியாளர் பணியிடத்தில் பணியேற்குமாறு பேரூராட்சியால் எனக்கு தெரிவிக்கப்பட்டது. பேரூராட்சியில் காலிப்பணியிடம் குறித்து விசாரித்தபோது, பதிவறை எழுத்தர் பணியிடம் காலியாக உள்ளது என தெரியவருவதால், பத்தாம் வகுப்பு வரை படித்துள்ள எனக்கு பதிவறை எழுத்தர் பணியிடத்தை வழங்க ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

3. பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 6.10.2021 அன்றைய இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் “தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி பணியிடையே காலமான திரு. பா. ராஜா என்பவரின் மனைவி கருணை அடிப்படையில் பணிவேண்டி பேரூராட்சியில் விண்ணப்பித்திருந்தார். குறித்த காலத்திற்குள் விண்ணப்பித்துள்ள அவரது விண்ணப்பத்தினை பரிசீலித்து, தற்போது காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்தை அளிக்க பேரூராட்சியில் முடிவு செய்து அவ்வாறே மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது. பத்தாம் வகுப்புவரை படித்துள்ள தனக்கு பதிவறை எழுத்தர் பணியிடம் மட்டுமே வழங்க வேண்டும் என

மனுதாரர் தெரிவித்துள்ளார். பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் தற்போது பதிவறை எழுத்தர் பணியிடம் காலியாக இல்லாததால், மனுதாரருக்கு துப்புரவு பணியாளர் பணியிடம் வழங்கப்படும் என பேரூராட்சியின் ந.க.எண்.362/2019 நாள் 4.9.2020–ல் கடித குறிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஒதுக்கப்பட்ட மேற்கண்ட துப்புரவுப் பணியாளர் பணியிடம் தற்போதுவரை காலியாக உள்ளது. மேலும் பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் பதிவறை எழுத்தர் பணியிடத்திற்கு பேரூராட்சியில் பணியாற்றிய துப்புரவு பணியாளருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் வேறு பேரூராட்சிக்கு மாற்றப்பட்டார். இதனால் ஏற்பட்ட காலியிடத்திற்கு மற்றொரு துப்புரவு பணியாளரை பதிவுரு எழுத்தராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு பின்னர் இவரும் வேறொரு பேரூராட்சிக்கு மாற்றப்பட்டார். மேற்கண்ட இரண்டு நிகழ்வுகள் தவிர மூன்றாவதாக வடுகப்பட்டி பேரூராட்சியில் இதேபோன்ற நிகழ்வு நடைபெற்றுள்ளது. மேற்கண்ட மூவரும் வெவ்வேறு பேரூராட்சிகளில் தற்போது பணியாற்றி வருகின்றனர். மேற்கண்ட பதவி உயர்வு மற்றும் பணிமாற்றம் 10 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்துள்ளது. விதிமுறைகளுக்கு மாறாக நிரப்பப்பட்டுள்ள மேற்கண்ட பணியிடங்கள் குறித்து பேரூராட்சிகளின் இயக்குநரால் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட பணியிடங்கள் பத்து வருடங்களுக்கு முன்பு நிரப்பப்பட்டுள்ளதால், இது குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மூலம், பேரூராட்சிகளின் ஆணையர் அலுவலகத்திற்கு தெளிவுரைவேண்டி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், துப்புரவுப் பணியாளர்களாக பணிபுரிந்தவர்களுக்கு பதிவறை எழுத்தர்களாக பதவி உயர்வு வழங்கியது குறித்து இப்பேரூராட்சியில் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையினரால் தணிக்கைத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதையும், இத்தணிக்கைத்தடை பற்றிய விவரங்களை ஒருவார காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்கிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரது புகார் மனு மீது பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலம், இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ள 8.7.2021 நாளிட்ட அறிக்கையில் மனுதாரர் கருணை அடிப்படையில் பணிநியமனம்வேண்டி அளித்த 22.10.2019 நாளிட்ட கோரிக்கை பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் பரிசீலிக்கப்பட்ட நிலையில், திருமதி. ரா. ரத்னாதேவி தனது 23.12.2019 நாளிட்ட மனுவில் தாமரைக்குளம் பேரூராட்சி வரித்தண்டலர் காலிப்பணியிடத்தில் தன்னை கருணை அடிப்படையில் நியமனம் செய்திட வேண்டினார். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை (நிலை) எண்.206 நாள் 2.11.1995ல் பணியிடையே காலமான பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக்காவலர் ஆகிய அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு மட்டுமே கருணை அடிப்படையிலான பணிநியமனத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய வரம்பிற்குட்பட்ட இளநிலை உதவியாளர்/வரித்தண்டலர் பணியிடங்களில் பணி நியமனம் செய்திட ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் இதர அரசு நிலையாக்கப்படாத பணியாளர்களின் வாரிசுதாரருக்கு நீட்டிப்பு செய்யும் வகையில் உரிய திருத்தம் வெளியிடக்கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டதன்பேரில், இக்கோரிக்கையினை ஏற்க இயலாது என அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் இயக்குநரது 8.7.2016 நாளிட்ட கடிதத்தில்

குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கடிதத்தின் அடிப்படையில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து பணியிடையே காலமான திரு. பா. ராஜா என்பவரின் மனைவியான திருமதி. ரா. ரத்னாதேவி என்பவரின் கோரிக்கையான வரித்தண்டலர் பணியிடத்தில் பணிநியமனம் வேண்டிய கோரிக்கை ஏற்க இயலாது என்ற விவரம் பழனிச்செட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கும், திருமதி. ரா. ரத்னாதேவிக்கும் உதவி இயக்குநரது குறிப்பாணை ந.க.எண்.2202/2019/பேரூ.2 நாள் 16.1.2020 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டு அதற்கான ஒப்புதலும் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்நிலையில், திருமதி. ரா. ரத்னாதேவி தனது 27.1.2020 நாளிடப்பட்ட மற்றொரு விண்ணப்பத்தில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து விதிகளுக்கு முரணாக பதிவறை எழுத்தராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள வடுகபட்டி பேரூராட்சி பதிவறை எழுத்தர் திரு. பெ. காளியப்பன் என்பவரது பதவி உயர்வினை ரத்து செய்து அதன் காரணமாக ஏற்படும் காலி பணியிடத்தில் தனக்கு நியமனம் வழங்குமாறு கோரினார்.

5. தேனி மாவட்டத்தில் பேரூராட்சிகளில் விதிமுறைகளுக்கு மாறாக துப்புரவு பணியாளர் பணியிடத்திலிருந்து பதிவறை எழுத்தர் பணியிடத்திற்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு கீழ்க்கண்ட நபர்கள் சுமார் பனிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருகிறார்கள் என்று பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலம் தெரிவித்துள்ளார்:-

| வ.எண் | பணியாளர் பெயர் | பதவி | பணிபுரியும் பேரூராட்சி |
|---|---|---|---|
| 1. | திரு. பெ. காளியப்பன் | பதிவறை எழுத்தர் | வீரபாண்டி |
| 2. | திரு. சு. கணேசன் | பதிவறை எழுத்தர் | ஹைறவேவிஸ் |
| 3. | திரு. பி. மாரிச்சாமி | பதிவறை எழுத்தர் | ஓடைப்பட்டி |

துப்புரவு பணியாளர் ஒருவருக்கு பதிவறை எழுத்தராக பதவி உயர்வு வழங்குவது பணியமைப்பு விதிகளுக்கு முரணானதாகும் எனத்தெரிவித்து, இத்தகைய தவறுக்கு காரணமானவரும் மேலே வரிசை எண்.2 மற்றும் 3–இல் கண்ட பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கியவருமான செயல் அலுவலர் திரு. வெ. ஜெயராமன் என்பவருக்கு சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரது குற்றச்சாட்டு குறிப்பாணை ந.க.எண்.14197/2017–3/அ3 நாள் 27.6.2019ன்படி தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (b)-இன்கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வரிசை எண்.1–இல் கண்ட பணியாளருக்கு பதவி உயர்வு வழங்கிய செயல் அலுவலர் திரு. ம. மணிராஜ் என்பவர் 31.10.2008ல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். ஆயினும், இப்பொருள் தொடர்பாக தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது அலுவலக கோப்பு ந.க.எண்.385/2019/பேரூ.2ன்படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

6. இத்தகைய சூழ்நிலையில், திருமதி. ரா. ரத்னாதேவி என்பவரின் மகளான செல்வி. ரா. கிரிஜா, த/பெ பா. ராஜா (லேட்) என்பவர் தனது தந்தை இறந்த பின்பு, தாயாரின் கவனிப்பின்மையால், தானும் தனது தங்கை யாசினி என்பவரும் அவர்களது தாத்தா, பாட்டியுடன் வசித்து வருவதாகவும், தனது தந்தை இறந்ததால் வழங்கப்படவேண்டிய பணப்பலன்களை தாயாருக்கு வழங்காமல் தங்களது எதிர்கால நலன்கருதி தங்களுக்கே வழங்குமாறும், தனக்கு

தற்போது பதினைந்து வயது நடந்துவருவதால் பதினெட்டு வயது பூர்த்தியடையும்பொழுது தனக்கு கருணை அடிப்படையில் பணி வழங்குமாறும், தாயாருக்கு பணி வழங்க ஆட்சேபித்தும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் 10.2.2020ல் கோரிக்கை மனுக்களை சமர்ப்பித்துள்ளார். தவிரவும் காலஞ்சென்ற துப்புரவு பணியாளர் திரு. பா. ராஜா (லேட்) என்பவருக்கு மற்றொரு வாரிசுதாரரான அவரின் தாயார் திருமதி. பா. பிச்சையம்மாள் என்பவர் குழந்தைகளின் எதிர்காலம் கருதி தங்களுக்கு உதவுமாறு கோரி கையொப்பமிட்டு 03.02.2020 அன்று மாவட்ட ஆட்சியரின் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு சமர்ப்பித்திருந்தார். ஆனால், திருமதி. ரா. ரத்னாதேவி என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட கருணை அடிப்படை நியமனத்திற்கான ஆட்சேபனையின்மை சான்றில் மேற்காண் நபரால் கைரேகை வைக்கப்பட்டுள்ளது என்றும் அதன் நகலினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். இங்ஙனம் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே ஒருமித்த கருத்து இல்லாததாலும் பல்வேறு முரண்பாடுகளுடனும் உள்ள தனியரது கோரிக்கையினை பரிசீலிக்க இயலாத நிலையினை சுட்டிக்காட்டி முரண்பாடுகளை களைந்திடவும், அனைத்து வாரிசுதாரர்களின் ஒருமித்த கோரிக்கையினை சமர்ப்பிக்க அனைத்து வாரிசுதாரர்களுக்கும் தெரிவித்திட, பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டார். மேலும், 10.02.2020 நாளிட்ட மனுவின் மூலம் தனக்கு கருணை அடிப்படையில் வடுகப்பட்டி பேரூராட்சியில் பதிவறை எழுத்தர் பணியிடம் வழங்கிடக்கோரி தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையகத்திற்கு தனியர் சமர்ப்பித்த மனு, மாவட்ட ஆட்சித் தலைவர், தேனிக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மூலமாக தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று உதவி இயக்குநர் தெரிவித்துள்ளதோடு, அக்கடிதத்தின் நகலினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

7. இந்நிலையில், ஒருமித்த கருத்துடன் கூடிய மற்றுமொரு கோரிக்கையை திருமதி. ரா. ரத்னா தேவி பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு சமர்ப்பித்துள்ளார். இதிலும், தனியர் தனக்கு வடுகப்பட்டி பேரூராட்சி பதிவறை எழுத்தர் பணியிடத்தில் பணி நியமனம் வேண்டியுள்ளார். ஆனால் மேற்படி பணியிடம் தற்பொழுது காலியாக இல்லை என்பதால், செயல் அலுவலர் மூலம் பரிந்துரைக்கப்பட்ட தனியரது கோரிக்கை ஏற்க இயலாது என தெரிவித்தும் தனியரது கணவரது துப்புரவு பணியாளர் பணியிடத்தில் பணிபுரிய விருப்பப்படின், நியமன அலுவலரான செயல் அலுவலர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு தெரிவிக்கப்பட்டது என்றும், அக்கடித நகலினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு பேரூராட்சிகள் உதவி இயக்குநர் சமர்ப்பித்துள்ளார். மேலும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது 18.3.2021 நாளிட்ட கடிதத்துடன் வரப்பெற்ற திரு. இரா. அன்புவேந்தன், மாநில தலைவர், இந்திய குடியரசு தொழிலாளர் தொழிற்சங்கம், தமிழ்நாடு, சென்னை என்பவரது கடிதத்தில் பணியிடையே காலமான துப்புரவு பணியாளரின் வாரிசுதாரரான திருமதி. ரத்னாதேவி என்பவருக்கு தேனி மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகளிலும், தேனி மண்டல பேரூராட்சியின் உதவி இயக்குநர் அலுவலகத்திலும் இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர் ஆகிய பணியிடங்கள் காலியாக இருந்தும் அரசாணை மற்றும் பணியமைப்பு விதிகளின்படியும் மேற்சொல்லப்பட்டுள்ள ஏதேனும் ஒரு காலி பணியிடத்திற்கு பரிந்துரை செய்து பணிநியமனம் செய்ய உதவி செய்யாமல் ஜாதிய வன்மத்துடன் பேரூராட்சிகளின் உதவி

இயக்குநர் செயல்படுவதாக தெரிவித்துள்ளார். மேலும், தேனி மாவட்டத்திலுள்ள வடுகப்பட்டி, ஓடைப்பட்டி மற்றும் ஹைறவேவிஸ் பேரூராட்சிகளில் பணிபுரிந்துவரும் பதிவறை எழுத்தர்கள் பணியமைப்பு விதிகளுக்கு முரணாக பதவி உயர்வு பெற்று இன்றுவரை தற்காலிகமாக பணிபுரிந்து வருகிறார்கள் எனவும், அவர்களை பணிநீக்கம் செய்து கருணை அடிப்படையில் வேலைகேட்டு நீண்டகாலமாக காத்திருக்கும் திருமதி. ரா. ரத்னாதேவிக்கு அப்பணியினை வழங்காமல் தனியர் ஆட்சேபனையின்மை சான்று அளிக்கவில்லையென தவறான தகவல் அளித்து வருவதாக தெரிவித்து, திருமதி. ரா. ரத்னாதேவி என்பவருக்கு மேற்காண் பணியிடங்களில் ஏதேனும் ஒரு பணியிடத்தை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார் எனவும் உதவி இயக்குநர், தேனி மண்டலம் தெரிவித்துள்ளார்.

8. தேனி மாவட்ட பேரூராட்சிகளில் காலியாக உள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ள இளநிலை உதவியாளர்/வரித்தண்டலர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய வரம்பிற்குட்பட்டதாகும். எனவே, அப்பணியிடங்களில் தனியருக்கு பணி வழங்க இயலாத நிலை உள்ளது. இவ்விவரம் ஏற்கனவே மனுதாரருக்கு கடிதக் குறிப்பு மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தேனி மாவட்ட பேரூராட்சிகளில் பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடம் தற்போது காலிப்பணியிடங்களாக இல்லை என்பதினால், மனுதாரரான திருமதி. ரா. ரத்னாதேவிக்கு அவரால் கோரப்படும் பதிவறை எழுத்தர் பணியிடம் கருணை அடிப்படையில் வழங்கிட தற்போது வழிவகை இல்லை.

9. அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (கியூ.1) துறை, நாள் 23.1.2020இல் கருணை அடிப்படையிலான விண்ணப்பங்களை பதிசீலிப்பதற்கான நடைமுறை பத்தி (vii) இல் துறைத்தலைவர் அவரது எந்தவொரு அலுவலகத்திலும் யாதொரு காலிப்பணியிடமும் இல்லை அல்லது பின்வரும் காலத்தில் காலிப்பணியிடம் எழுவதற்கான சாத்தியமில்லை என்று அறிந்தால், இறந்த அரசுப்பணியாளர் இறுதியாக பணிபுரிந்த மாவட்டத்தின் ஆட்சியாளருக்கு விண்ணப்பதாரரின் பெயரையும், தொடர்புடைய அனைத்து விவரங்களையும் அனுப்பிவைக்கவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனுதாரர் கோரியுள்ள உதவியாளர் பணியிடம் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் பூர்த்திசெய்யப்படவேண்டிய பணியிடம் என்பதாலும், இளநிலை உதவியாளர், வரித்தண்டலர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய வரம்பிற்குட்பட்டதினால் அப்பணியிடங்களில் தனியருக்கு பணி வழங்க இயலாது நிலையுள்ளது என்பதினாலும், பதிவறை எழுத்தர் பணியிடங்கள் தேனி மாவட்ட பேரூராட்சிகளில் தற்சமயம் காலிப்பணியிடங்களாக இல்லை என்பதினாலும், தனியருக்கு தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் கருணை அடிப்படையிலான முன்னுரிமை பதிவேட்டில் மனுதாரரின் பெயரினை சேர்த்துக்கொள்ளவேண்டி தொடர் நடவடிக்கைக்காக தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 7.6.2021 நாளிட்ட கடிதம் மூலம் பேரூராட்சிகளின் ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேனி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

10. இந்நேர்வில் திருமதி. ரா. ரத்னாதேவி என்பவரது கருணை அடிப்படையிலான கோரிக்கையின்பேரில் தொடர் நடவடிக்கைகள் விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், தனியர் கருணை அடிப்படையிலான நியமன கோரிக்கையினை தொடர்ந்து மாற்றியமைத்துக்கொண்டே இருந்ததாலும் பணிநியமனம் வழங்க இயலாத/காலியில்லாத பணியிடத்தில் நியமனம் கோரியதாலும், தனியரது குடும்ப உறுப்பினர்களுக்கிடையே முரண்பட்ட கருத்து நிலவியதாலும், தனியருக்கு கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்கிட இயலாத நிலை தொடர்ந்து இருந்து வருகிறது. தனியரது கணவரின் துப்புரவுப் பணியாளர் பணியிடம் நாளது தேதிவரை காப்பு செய்து வைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினையும் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் தனியருக்கான பதிவறை எழுத்தர் பணியிடம் தேனி மாவட்ட அலகில் தற்போது காலியாக இல்லையென்ற விவரமும், இக்கோரிக்கையினை விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலித்ததில், இனபாகுபாடின்றி முரண்பாடுகளுக்கிடமில்லாத வகையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

11. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் புகார் மனுவுடன் அவர் இணைத்தனுப்பியுள்ள ஆவணங்கள் மற்றும் கல்வித் தகுதிக்கான சான்றிதழ், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம், அவரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்காணும் விவரங்கள் அறியப்படுகின்றன:–

- ❖ மனுதாரரின் கணவர் 1.9.2019ல் பணியிடையே காலமான நிலையில், மனுதாரர் கருணை அடிப்படையில் பணி நியமனம் வேண்டி விண்ணப்பம் அளித்து இரண்டாண்டுகள் கடந்துள்ள நிலையில், மனுதாரருக்கு இன்னமும் பணி நியமன ஆணை வழங்காமல் காலதாமதம் செய்யப்பட்டுள்ளது.
- ❖ 2007–2008 முதல் 2013–2014 வரையிலான தணிக்கைத் துறை தடைகளில் முறையற்ற பதிவறை எழுத்தர் பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் எதனையும் நாளது தேதி வரையில் நிவர்த்தி செய்யப்படாமல் இருப்பது பேரூராட்சி செயல் அலுவலர்களின் கடமைதவறிய செயலையும், மெத்தனப் போக்கையும் காட்டுகிறது.
- ❖ தணிக்கைத்துறை தடைகள் மீது உரிய நடவடிக்கையை மேற்கொள்ளாமல் காலம்தாழ்த்தியுள்ளது ஏதோ உள் நோக்கத்துடன் மேற்படி பணி நியமனங்கள் வழங்கப்பட்டு, மேற்படி நியமனங்கள் மூலம் இதுவரை பணியாற்றி வருவோரை காப்பாற்றும் நோக்கத்துடன் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் பழனிசெட்டிபட்டி பேரூரராட்சி செயல் அலுவலர்கள் இருந்துவந்துள்ளனர் என்பது தெள்ளத் தெளிவாக தெரியவருகிறது.

12. மேற்கண்ட செயல்களை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிப்பதோடு மட்டுமல்லாமல், மனுதாரரின் கணவர் இறந்து இரண்டாண்டுகள் கடந்துள்ள நிலையிலும், மனுதாரரின் குடும்ப சூழல் கருதியும், அவரது கல்வித் தகுதியின் அடிப்படையில் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு உடனடியாக பணிநியமனம் வழங்குமாறு பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

13. விதிகளை பின்பற்றாமல் பதிவறை எழுத்தர்களாக பணிநியமனம் செய்து அதற்கு உடந்தையாக இருந்தும் தற்போது இருந்துவரும் செயல் அலுவலர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து உரிய தண்டனை வழங்கிடுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளர் கோரப்படுகிறார். அப்போதுதான் இதுபோன்ற தவறுகள் இனிமேல் நடக்காது எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

2021ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திருமதி. ரா. ரத்னாதேவி,
க/பெ (லேட்) பா. ராஜா, கதவு எண்.9–1–10/1 வடக்கு ஜெகநாதபுரம்,
கக்கன்ஜி தெரு, பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம்–625 531

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம், தேனி (தகவல் மற்றும் நடவடிக்கைக்காக)

செயல் அலுவலர், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
பழனிசெட்டிப்பட்டி, தேனி மாவட்டம்–625 531

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

30/11/21

செயலாளர்

30.11.2021